4. அறிவிப்பு.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, (1) இன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இந்த மூன்றாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன் :

1. திரு. சா. கணேசன்
2. டாக்டர் க. காஞ்சனா
3. திரு. வே. தங்கபாண்டியன்
4. திரு. கே. அர்ஜுனன்
5. திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்
6. திரு. கோ. பூவராகன்

5. சட்டமுன் வடிவுகள் (அறிமுகம்)

(அ) சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) பச்சையப்பன் அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப் பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1990.

1990 சனவரி 19]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : இச் சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. அரசினர் தனித் தீர்மானம்.

தாழ்த்தப்பட்ட மலைவாழ், ஆங்கிலோ இந்திய மக்களுக்கான இட ஒதுக்கீடுகளை நீட்டிக்கச் செய்யும் திருத்தங்களுக்கு ஏற்பளித்தல் [நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 1989ஆம் ஆண்டு அரசமைப்பு (அறுபத்திரெண்டாம் திருத்த) சட்டமுன் வடிவினால் செய்யக்கருதப்பட்டுள்ள திருத்தங்கள்.]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அரசினர் தனித் தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

''நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 1989 ஆம் ஆண்டு அரசமைப்பு (அறுபத்திரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள இந்திய அரசமைப்பின் 368-வது பிரிவின் (2)ஆம் பகுதியின், வரம்புரையின் (d) பகுதியின், நிபந்தனையின்கீழ் வரும் திருத்தங்களுக்கு இப்பேரவை ஏற்பளிக்கிறது''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தத்தீர்மானத்தை திருத்தங்களை இந்தத் தீர்மானத்தின் மூலமாக—ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்த அவையை நான் கேட்டுக்கொள் கிறேன். இந்த அவையில் இதற்கு எதிரான கருத்து எதுவும் இருக்காது என்பதை நான் மிக நன்றாக நம்பிக்கையோடு உணரு கிறேன். அரசமைப்புச் சட்டத்தினுடைய பாராளுமன்ற மக்கள் அவையிலும் மாநில சட்டமன்றத்திலும் 334 பிரிவு தாழ்த்தப் பட்ட, மலைவாழ் மக்களின் இட ஒதுக்கீட்டிற்கும், ஆங்கிலோ இந்தியன் பிரிவினரின் நியமனத்திற்கும் வகை செய்கிறது. இதுவரை இந்தப் பிரிவினர் 40 ஆண்டு காலம் இந்த உரிமையை அதற்குச் சலுகை என்று பெயர் அளித்தாலும்கூட அவர்களுக்கு அளிக்கப்பட்ட இந்த உரிமையை அனுபவித்து வந்திருக் கிறார்கள். இது 1990 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம்